

# கடைசி உபத்திரவம்

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள்
பேசிய செய்திகளிலிருந்து

**நீங்கள் சபைகளின் ஐக்கியத்தை சார்ந்தவர்களாக இல்லாவிடில் உங்களால் சபைக்கு போக முடியாது என்கிற நிலை வரும்.**



# செய்தி: 58-12-21E ஒரே சபையில் ஒரே தேவனுடைய ஐக்கியம்

41. கத்தோலிக்கமும், கத்தோலிக்க சபையும் எல்லா நபரையும் கத்தோலிக்கர் களாக மாற்ற முயற்சித்துக் கொண்டிருக் கிறதைக் குறித்து நீங்கள் சிந்தித்ததுண்டா? அது கிரியை செய்யாது. அது மனிதனால் உண்டாக்கப்பட்ட செயல்முறை திட்டத்தின் (man-made program) கீழாக இருக்கிறது.

42. பிராட்டஸ்டெண்டு சபையானது சபைகளின் கூட்டமைப்பின் கீழாக இருந்து கொண்டு இந்த எல்லா சிறிய சபைகளை யும் வெளியே தள்ள முயற்சித்துக் கொண் டிருக்கிறதைக் குறித்து எப்பொழுதாவது நீங்கள் சிந்தித்ததுண்டா?

**நீங்கள் சபைகளின் ஐக்கியத்தை சார்ந் தவர்களாக இல்லாவிடில் உங்களால் சபைக்கு போக முடியாது என்கிற நிலை வரும்.**

**பின்பு இதுபோன்றுள்ள சிறிய இடங்கள் அதற்காக நிச்சயம் கிரயம் செலுத்த வேண்டியிருக்கும்.**

**ஆனால், “பயப்படாதே சிறு மந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தை கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்" என்று கூறுகிற ஒரு வேதவாக்கியம் நமக்கு இருக்கிறது.** அதற்காகவே நாம் காத்திருக் கிறோம்.

**“முடிவில் உபத்திரவம் உண்டாகும்” என்று வேதம் கூறுகிறது. இது கர்த்தர் உரைக்கிறதாவது! நிச்சயமாக உபத்திரவம் உண்டாகும்.**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

## செய்தி: 61-03-19 யேசபேல் மார்க்கம்

63. என் சத்தம் விரைவில் ஏன் நிறுத்தப்படப் போகிறது என்பதை உங்களால் காண முடிகிறதா, யாராகிலும் ஒருவர் அறிந்து கொள்ளப் போகின்றார்! ஆம்! ஏன்? வெளி. 2:20ல் அவள் தன்னை தீர்க்கதரிசியென்று அழைத்துக் கொள்கி றாள். பாவம் அலைபோல் நடந்து வரு கிறதை கவனியுங்கள். நவீன, தேவனுக்கு விரோதமான செயல்கள் சபைகளில் நடப் பதைக் கவனியுங்கள்.

”முடிவில் உபத்திரவம் உண்டாகும்” என்று வேதம் கூறுகிறது. இது **கர்த்தர் உரைக்கிறதாவது**! நிச்சயமாக உபத்திரவம் உண்டாகும்.

அநேக ஆண்டுகளுக்கு முன்பு அஞ்ஞான ரோமாபுரியில் அவர்கள் செய்தது போன்ற மதச் சம்பந்தமான துன்புறுத்தலுக்குள் நாம் வந்து கொண்டிருக்கிறோம். அது கர்த்தர் உரைக்கிறதாவது!



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 58-09-27 நாம் ஏன் ஒரு ஸ்தாபனம் அல்ல?, Para 28

வேதத்தில் சிவப்பு (Scarlet) நிறம் ராஜரீகத்தைக் குறிக்கிறது. அது சிவப்பு நிறம். மிருகம் “அதிகாரத்தைக் குறிக்கிறது. சமுத்திரத்திலிருந்து எழும்பி வருகிறது என்பதை கவனித்தீர்களா? (வெளி. 13:1) மிருகம் சமுத்திரத்திலிருந்து எழும்பி வருகிறது. நீங்கள் காண்பீர்களானால் அதன் அதிகாரம் ஜனங்களிடையே அதி கரிக்கிறது என்று அர்த்தம். அதே வெளிப்படுத்தின விசேஷம் 13-ம் அதிகாரத்தில் ஆட்டுக்குட்டி எழும்பி வரும்போது, அது பூமியிலிருந்து எழும்பி வருகிறது (13:1) அது ஜனத்தொகை அதிகம் இராத அமெரிக்க ஐக்கிய நாடுகள்.

அதற்கு இரண்டு கொம்புகள் உள்ளன - அரசு சம்பந்தமான அதிகாரமும். மதச் சம்பந்தமான அதிகாரமும் அது அதிகாரத் தைப் பெற்று, அதற்கு முன்பிருந்த வலுசர்ப்பத்தைப் போல் பேசினது. எனவே அதை நீங்கள் குறித்துக் கொள்ள வேண்டும். **அநேக ஆண்டுகளுக்கு முன்பு அஞ்ஞான ரோமாபுரியில் அவர்கள் செய்தது போன்ற மதச் சம்பந்தமான துன்புறுத்த லுக்குள் நாம் வந்து கொண்டிருக்கிறோம். அது கர்த்தர் உரைக்கிறதாவது !** அது என்ன, "மிருகத்தின் மேல் ஏறியிருப்பது, அதி காரம் வகிப்பது."

இங்கு நம்மிடையேயுள்ள
சபைகள் எல்லாம் மூடப்பட்டு,
ஐக்கிய ஆலோசனைச் சங்கத்தின்
அனுமதி அல்லது சான்றிதழ்
இல்லாமல் பேசவோ, ஆராதனை
நடத்தவோ முடியாத ஒரு
நிலைமையுண்டாகும்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

## செய்தி: 62-03-18E உரைக்கப்பட்ட வார்த்தையே மூலவித்து #2

10. சரி. இந்த பெந்தெகோஸ்தே கூட்டமும், சுவிசேஷக் கூட்டமும் ஒன்றாக ஊழியம் செய்து ஒரு ஸ்தாபனமாக இணைந்து, பின்பு உலக ஐக்கிய ஆலோசனை சபையில் ஒரு அங்கமாக மாறும் என்பதனை நான் முன்னறிவிக்கிறேன். ஏற்கனவே அவர்கள் அவ்விதமாயிருக்கின்றனர்.

**அவர்கள் மூலமாக மற்ற சபைகளுக்கு ஒரு ஆக்கப்பூர்வமான தடையுண்டாக்கப்பட்டு, ஒருங்கிணைக்கப்பட்ட அச்சபைகளைச்** (union of churches) **சார்ந்தது மட்டுமே நிலைத்திருக்கத்தக்கதான நிலைமை ஒன்று வருகிறதாயிருக்கிறது.**

**ரோமமார்க்கமான மிருகத்தின் முத்திரையைப் பெற்று கொள்ளாதவர்கள் வாங்கவோ, விற்கவோ கூடாத அளவிற்கு ஒருதடை வரப்போகிறது என்று வேதம் கூறுகிறது.**

மிருகத்திற்கு ஒரு சொரூபம் கொடுக்கப்பட்டது.

அதுதான் கத்தோலிக்க மார்க்கத்திற்கு விரோதமாய் பிரிந்த பிராடெஸ்டெண்ட் மார்க்கமாகும்.

இந்த சொரூபத்திற்கு (ஸ்தாபன சபைகள் - தமிழாக்கியோன்) பேசத்தக்கதாக ஆவியையும் சத்துவத்தையும் கொடுக்க மிருகம் வல்லமையுள்ளதாயிருந்தது.

ஸ்தாபன சபைகளாக ஐக்கிய ஆலோசனை சபையில் அவர்கள் சேரும்போது நடைபெறப்போவது அதுவே.

11. இங்கு அநேக வாலிபர்கள் இருக்கின்றீர்கள்.

ஒருவேளை இன்று பகல் அல்லது அடுத்த வருடம் இயேசு வரக்கூடும். அவர் எப்பொழுது வருவார் என்று நான் அறியாதவனாயிருக்கிறேன்.

**ஆனால் ஒன்றை ஞாபகம் கொள்ளுங்கள்; அவர் வருவதை நான் பார்க்க ஜீவித்திராவிட்டால், (அவ்விதம் அவர் வருவதைக்காண நான் ஜீவித்திருப்பேன் என்று நம்புகிறேன்) இந்த என்னுடைய வார்த்தைகள் உங்கள் செவிகளையும் இருதயங்களையும் விட்டு அகலாதிருப்பதாக. பாருங்கள்?**

நான் இவைகளை கர்த்தருடைய நாமத்தினால் கூறுகிறேன்.

ஒரு சங்கம் (union) போன்று அது அமைந்து பின்பு ஆக்கப்பூர்வமான ஒரு தடையையுண்டாக்கும்; அவ்விதமாகவே ஸ்தாபனங்கள் முதிர்ச்சியடையும் என்று நான் என் இதயப்பூர்வமாக விசுவாசிக்கிறேன்.

**இங்கு நம்மிடையேயுள்ள சபைகள் எல்லாம் மூடப்பட்டு, ஐக்கிய ஆலோசனைச் சங்கத்தின் அனுமதி அல்லது சான்றிதழ் இல்லாமல் பேசவோ, ஆராதனை நடத்தவோ முடியாத ஒரு நிலைமையுண்டாகும்.**

12. இப்பொழுதே, அவ்விதமான காரியங்களும் கட்டுப்பாடுகளும் ஸ்தாபன சபைகளில் உண்டாயிருக்கின்றன.

ஆம் ஐயா, அதை நீங்கள் பெற்று கொள்வீர்கள் என்பதற்கு அறிகுறியாக அவை அங்கேயுண்டாயிருக்கின்றன.

அதிலேதான் அது முடிவடையும்.

கிறிஸ்துவின் ஒரு ஊழியக்காரனாக, நான் பெற்ற வார்த்தையின் வெளிப் பாட்டின் புரிந்துகொள்ளுதல் மூலமாக ஸ்தாபனங்கள் அவ்விதமான கட்டுப் பாட்டைக் கொண்டு வரும் என்று நான் முன் அறிவிக்கிறேன்.

எல்லா அடையாளங்களும் முடிவை சுட்டிக் காட்டுகின்றன.

அதைக் குறித்து சற்று முன்புதான் நான் பிரசங்கித்தேன்.



இந்த சபைகளில் ஆலோசனை சங்கத்தில், எல்லா சபைகளும் இந்த ஆலோசனை சங்கத்தில் சேர்ந்திருக்க வேண்டும். இல்லையென்றால் நீங்கள் பிரசங்கம் செய்யவும் கூட அனுமதியளிக்கப்படமாட்டீர்கள்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 63-1124M — கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்?

**இந்த சபைகளில் ஆலோசனை சங்கத்தில், எல்லா சபைகளும் இந்த ஆலோசனை சங்கத்தில் சேர்ந்திருக்க வேண்டும்.**

**இல்லையென்றால் நீங்கள் பிரசங்கம் செய்யவும் கூட அனுமதியளிக்கப்பட மாட்டீர்கள்.**

**நீங்கள் வியாதியஸ்தருக்கு ஜெபிக்கவும் கூட அனுமதியளிக்கப்படமாட்டீர்கள்.**

**உங்கள் சபை கட்டிடம் அவர்கள் விருப்பப்படி எதற்கு வேண்டுமானாலும் உபயோகிக்கப்படும்.**

அவர்கள் அதை வெடிமருந்து நிறைக் கப்பட பெட்டிகளை சேகரித்து வைக்கும் ஸ்தலமாக உபயோகிக்க விரும்பினால், அல்லது வேறெதையாகிலும் செய்ய விரும்பினால், அதைக் குறித்து நீங்கள் எதையும் சொல்ல உங்களுக்கு அதிகாரம் இராது.


**ஒன்று நீங்கள் சபைகளின் ஆலோசனை சங்கத்தில் சேர்ந்திருக்க வேண்டும் அல்லது அதில் சேராமல் இருக்க வேண்டும்.**

அந்த முறைமை அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உருவாக்கப்பட்டுக் கொண் டிருக்கிறது, அது வேதவாக்கியங்களை முற்றிலும் நிறைவேற்றுவதாய் உள்ளது.

அது கர்த்தர் என்னிடம் 1933-ம் ஆண்டில் கூறினதை நிறைவேற்றுவதாய் உள்ளது.

பாருங்கள் அந்த நேரத்தில் தான் நாம் இன்று காலை நின்று கொண்டிருக்கிறோம்.





**It will not be in operation so perfectly now. Wait till that Council of Churches brings on that persecution, that's when it will happen.**



Rev. William Marrion Branham

# 64-0120 — His Unfailing Words Of Promise

138 Now, that great gift! Others I've tried to explain and say how it was done. This can't be explained. Just wait.

It will not be in operation so perfectly now.

Wait till that Council of Churches brings on that persecution, that's when it will happen.

That's the reason I come back among you, to pray for the sick.

I have never had but one thing that He ever told me in my life that I know that hasn't happened yet, that some sort of a building

or a tent where there will be a little building setting and I'd have to go into that and pray for the sick. That hasn't happened yet as far as I know. That's the only thing that I know.




கடைசி உபத்திரவம்
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள்
பேசிய செய்திகளிலிருந்து